# கவி மலர் மாலை

# கவி மலர் மாலை

மாலை—1.

(நான்காம் வகுப்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள்,

*Senior Tamil Pandit, Lady Willingdon Training College, Madras.*

பதிப்பாளர்:

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**

ஜார்ஜ் டவுன், சென்னை

பதிப்புரிமை] 1939 [விலை அணா 4

**Approved by the Text-Book Committee, Madras**

*Vide Fort St. George Gazette, Consolidated list of Approved Books on page 222 Dated 2nd May, 1939.*

# முகவுரை

சீரிய அறிவுடையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்கள் சிலவற்றுள் போதனா முறை என்பதும் ஒன்று. தானங்கள் பலவற்றுள்ளும் கல்வி தானமே தலை சிறந்ததெனக் கூறல் மிகையாகாது. உடலை ஊட்டி வளர்க்கும் அன்ன தானத்தைப் போன்றதன்று உயிரை ஊட்டி வளர்க்கும் கல்வி தானம். இஃது அழியாததும் என்றும் மக்களைத் தொடரத்தக்கதுமாகும்; இஃது ஈவோர், பெறுவோர் ஆகிய இரு பாலாருக்கும் இன்பத்தையும், அறிவுப் பெருக்கத்தையும் ஒருங்கே ஈயும் வன்மையுடையது. 'இறைக்குங் கிணறு சுரக்கும்,' என்னும் பழமொழியைக் கல்வியினிடம் வைத்து நோக்கின், மிக்க பொருத்தமாகும். கல்வி போதிப்பதை ஒரு தெய்வீகத் தொழில் என்னலாம். இத்தொழிலைப் பெறும் பாக்கியம் நம் நாட்டில் சிலருக்கே கிடைத்துள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டவரை ஆசிரியரென வழங்குகின்றோம். இவர், தம்மை அடைந்தவர் அறியாமையைப் போக்கி, அறிவைப் பெருக்கும் சிறப்புறு கருவியாயுள்ளனர். குழந்தைகளின் அறிவையும், ஆன்மாவையும் தக்க முறையில் வளர்ப்பவர் இவரே. ஆசிரியர் ஒருவராலே ஆயிரக் கணக்கான மக்கள் அறிவு பெற்று விளங்குவதை அறியாதார் யார்! கல்விப் பாலூட்டி, அறிவுத் தொட்டிலிலிட்டு, இன்பத் தாலாட்டுப் பாட ஆசிரியர் ஒருவரே தக்கவர் என்பதை யாரால் மறுக்க முடியும்! ஆனால், தந்நலம் பாராட்டாது குழந்தைகளின் மலர்ந்த முகங் காணுமளவும் பொருள்களை அவர்கள் மனத்தில் ஊன்றவைக்கும் ஆசிரியரே நல்லாசிரியர். மாணவரின் உண்மைத் தேர்ச்சியே தமக்குப் பெருநிதி என்னும் எண்ணம் ஆசிரியர் ஒவ்வொருவர் மனத்திலும் ஊன்றியிருத்தல் நலம்.

ஆசிரியரின் நிலையை இரண்டாக வகுக்கலாம்: அவர் பாடங்களை ஆயத்தஞ் செய்யுங்கால் மாணவராகின்றனர்; போதிக்குங்கால் உபாத்தியாயராகின்றனர். மாணவர்க்குப் போதிக்கப் புகும் பாடங்களை ஆசிரியர் முன்னரே கருத்தூன்றி நோக்காவிடில் அவற்றைக் குழந்தைகளின் மனத்தில் ஊன்ற வைத்தல் கூடாததாகும்.

இத்தன்மையில் செய்யுளைத் தக்க முறையில் குழந்தைகளுக்குக் கற்பித்தல் ஆசிரியரின் இன்றியமையாத கடமை. வசன பாடத்தைவிடச் செய்யுட் பாடத்தில் பொருட்செறிவு அதிகம் உண்டு. செய்யுளை ஊன்றி நோக்க நோக்கப் புதிய பொருள்கள் தோன்றிக்கொண்டே இருக்கும் என்பது அறிவுடையோர் அறிந்ததே. புலமையிற் சிறந்த சான்றோரின் செய்யுட்கள், நோக்குவார் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்றவாறு பொருள் தந்து நிற்குமே அன்றி, இவ்வளவுதான் பொருள் என வரையறுத்துக் கூற இடந்தரா. இறைக்குந்தோறும் சுரக்கும் கிணற்றைப் போன்று, செய்யுளும் ஆராயுந்தோறும் பொருள் தோன்றிக்கொண்டே இருக்கும் ஒரு நிதிப் புதையல் எனக் கூறல் மிகையாகாது, இத்தகைய நிதியின் இன்பத்தை நம் இளைஞர் நன்கு துய்க்குமாறு தக்க முறையில் போதித்தல் வேண்டும். வசன பாடத்தைக்காட்டிலும் செய்யுட்பாடம் மனப்பாடம் செய்தற்கு எளிது; பொருளும் தெரிந்துவிடின், துன்பமில்லாமலே மனத்தில் பதிந்துவிடும்.

ஆசிரியர் சம்பாஷணை மூலமாகவோ, கதை மூலமாகவோ, செய்யுட்களின் கருத்து, அநுவயம் (வசன நடை), பதவுரை, பொருள் விளக்கம் முதலியவற்றை இயன்ற வரையும் குழந்தைகளிடமிருந்தே வருவித்து, அவர்கள் அறிவைப் பெருக்க வேண்டுமென்பது தற்கால முறை. இதை ஆசிரியர் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருக்கலாம். இம்முறையில் செய்யுளின் பொருளையும், அதற்குத் தொடர்புடைய இயற்கை, சரித்திரம், பூகோள சாஸ்திரம், பொதுப் பொருளின் இயல்பு, நூலாசிரியரின்

உணர்ச்சி முதலியவற்றையும் குழந்தைகள் நன்குஉணர்தற்கு இந் நூல் சிறந்த துணையாகுமென நினைக்கிறேன். இக்கேள்விகளி ஞல் குழந்தைகளின் அறிவை வளர்த்துக் கடினமான இடங் களில் ஆசிரியர் துணை புரிதல் நலம். இதைப் போன்றே இன் னும் பல கேள்விகளைக் கேட்குங்கால், அவர்கள் அறிவு விரியும். கடின பதங்களை வாக்கியங்களில் அமைக்க மாணவரைத் தூண்டு தல் நலமளிக்கும். ஒவ்வொரு செய்யுளையும் அனுவயப்படுத்தக் கேள்வி கேட்டல் நலம்.

உரைப் பகுதிக்கும், செய்யுட்பகுதிக்கும் உள்ள வேறு பாட்டைச் சிறுவர்கள் நன்கு அறியுமாறு செய்தல் வேண்டும். முன் செய்யுட்களில் படித்த இலக்கணமோ, சொற்களோ, பொருளோ பின்னும் வரின், அவற்றை நினைப்பூட்டிக்கொண்டு போதல் குழந்தைகளின் நினைப்பை வளர்ப்பதாகும். செய்யு ளில் தோன்றும் பாவனை முதலியவற்றை நன்ருக அறியுமாறு குழந்தைகளைப் பழக்குதல் சாலச் சிறப்புடையது. காணக் கூடியதை வரைதலினுலும்; உணரக் கூடியதைப் பாவனையிஞலும் அவர்கள் மனத்தில் ஊன்றச் செய்யவேண்டும். இவற்றைச் சிற் சில செய்யுட்களில் எடுத்துக் காட்டியுள்ளேன். இரந்தவர் இன் முகம் காணுமளவும் அவர்களிடம் இரக்கங்கொள்வது எங்ஙனம் பயனற்றதோ, அங்ஙனமே பாடத்தைக் குழந்தைகளின் மனத் தில் ஊன்ற வைக்கு மளவும் நம் போதனையும் பயனற்றதாகும்.

இதிலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் நூலாசிரியர் வாழ்க்கை, நூலின் போக்கு முதலியன சுருக்கிக் கூறப்பட்டுள்ளன; மாணவர் எட்டாம் வகுப்பு (**III Form**) முடிப்பதற்குள், பதினெண் கீழ்க் கணக்கு முதலியவற்றுள் ஏறக்குறைய இருபத்தைந்து நூல்களும், பல புலவரால் பாடப்பட்ட தனிப்பாடல்களும், சதகங்களும், பஞ்ச தந்திரக்கதை, புராணக்கதை, வீடு கதை முதலியவற்றில் சிலவும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்திஞலேயே இந் நூல்கள் தொகுக்கப்பட்டன. ஒவ்வொரு பாடத்திலும் மாண வர்களே முயன்று, பொருள் காணல் சிறந்தது என்னும் தற்கால

முறைக் கேற்றவாறு ஒவ்வொரு செய்யுளின் கீழும் வினாக்களைக் கொடுத்துள்ளேன். கடின பதங்களுக்குப் பொருளும், கடின சந்தியும் குறிக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்க்குப் பெரிதும் பயனளிக்கக் கூடும். இப்பயிற்சி அவர்களுக்கு எந்தச் செய்யுளையும் ஊன்றிப் படிக்கும் விருப்பத்தையும், ஆராய்ந்து பார்க்கும் ஆசையையும் உண்டாக்குமென்பது என் கருத்து. இறுதியில் ற, ர, ண. ன, ல, ள, ழ, இவை அமைந்து வரும் சொற் பொருள் வேறுபாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

கல்வியிலும் அறிவிலும் குறைவுடையேன் இயற்றிய இந் நூலிலுள்ள குற்றங்களைச் சான்றோர் எடுத்துக் காட்டின், மகிழ்வுடனேற்றுத் திருத்திக்கொள்ள முற்படுவேன்.

அரிய எண்ணங்களை அவ்வப்போது மனத்தில் தோற்றுவித்துக் கல்வித் தொண்டு புரிய அருள் புரிந்து வரும் இறைவனுக்கும், ஞானத்தை ஊட்டிய ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

S. கிருஷ்ணவேணி.

# பொருள் அடக்கம்

| பொருள் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| **I.** வணக்கம் | | | | |
| 1. பெற்றோர் வணக்கம் | | .... | .... | 11 |
| 2. கலைமகள் வணக்கம் | | .... | .... | ,, |
| 3. நாமகள் மாலை | | .... | .... | 12 |
| **II.** நீதிப்புதையல் : | | | | |
| 1. மூதுரை | .... | .... | .... | 13 |
| 2. நல்வழி | .... | .... | .... | 29 |
| 3. விவேக சிந்தாமணி | | .... | .... | 43 |
| 4. தனிப்பாடல்கள் | | .... | .... | 47 |
| **III.** கதைத் தொகுதி : | | | | |
| 1. அல்லி அரசாணி மாலை | | .... | .... | 53 |
| 2. விடுகவிகள் | .... | .... | .... | 59 |
| எழுத்து வேறுபாடும் பொருள் வேறுபாடும் | | | | 61 |
| செய்யுள் முதற்குறிப்பு அகராதி | | | .... | 63 |

# கவி மலர் மாலை

## மாலை 1

## I. வணக்கம்

### 1. பெற்றோர் வணக்கம்

தாயினிற் சிறந்த தெய்வம்
இலை;உயர் தந்தை தன்னின்
ஏயநற் குருவும் இல்லை;
என்னின்மற் றிவர்கள் தாளில்
தூய்மலர் தூவி நாளும்
தொழுதிடும் அறிஞர் தாமே
ஆய்கதிர் பரப்பும் பொன்னாட்(டு)
அமரராய், இனிது வாழ்வார்.

### 2. கலைமகள் வணக்கம்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

## 3. நாமகள் மாலை*

(திரு. இராகவாசாரியார்)

கலையின் மகளே! கலைதேர் அமுதே!
விலையின் மணியே! வினைதீர் மருந்தே!
உலையின் மெழுகொத் துருகும் படிநின்
மலர்மெல் லடியென் மனமே வுகவே. 1

கற்றோர் புகழுங் கருணைக் கடலே!
பொற்றா மரையாள் புகலும் பொருளே!
வற்றா வருளின் வழியே யொழுகப்
பெற்றா லடியேன் பிழைபா டிலனே 2

கண்ணுண் மணியே! கருணா நிதியே!
விண்ணின் ஒளியே! வியன்மூ வுலகுக்
உண்ணின் றொளிரு முணர்வே! உணர்வின்
தண்ணென் னலமே! தமியேற் கருளே. 3

கல்விக் கடலே! கவியின் சுவையே!
செல்வப் பொருளே! திகழ்பா ரதியே!
பல்விக் கினமாற் றுபரம் பொருளே!
புல்விக் குள்புகும் பொழுதில் புரவாய். 4

வேதத் துறைவாய்! விதியே முதலோர்
போதத் துறைவாய்! புகலும் புலவோர்
வாதத் துறைவாய்! வளர்தா மரையாய்!
பாதத் துணையல் லதுபற் றிலனே. 5

குறிப்பு:—கலை - கல்வி, உலையின் மெழுகொத்து - கொல் உலையில் இட்ட மெழுகு போன்று, பொன் + தாமரை - பொற்றாமரை = அழகிய (பிரகாசம் பொருந்திய) தாமரை, வியன் - பெருமை பொருந்திய (பரந்த), உள் + நின்று - உண்ணின்று.

---

* இப்பகுதி காலம்சென்ற இந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் திரு. இராகவாசாரியரின் மனைவியார் டி. செல்லம்மாள் அவர்களது அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

# II. நீதிப் புதையல்

## 1. மூதுரை

(ஔவையார்)

இந்நூல் நல்ல நீதி வழிகளைக் கற்பிக்கின்ற ஒரு நூல். இதற்குப் பண்டையோருடைய அமுத மொழிகள் எனப்பொருள் கூறலாம். இது புலமை வாய்ந்த அவ்வையார் என்னும் மூதாட்டியார் ஒருவரால் செய்யப்பட்டது. இவர் யாளி தத்தர் என்னும் முனிவருக்குப் புதல்வியாராகத் தோன்றினர் எனச் சிலர் கூறக் கேட்கின்றோம். இவருடன் பிறந்தவர் திருவள்ளுவர், கபிலர், உப்பை முதலிய அறுவர் எனப் பகர்கின்றனர். இவர் பிறப்பைப்பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரிந்திலது. ஆனால், இவர் ஒரு பாணர்வீட்டில் வளர்ந்ததாக ஒரு வதந்திஉலவி வருகிறது. இவரைப்பற்றி அநேக கதைகள் உண்டு. பழைய தமிழ் நாட்டில் அறிவிற் சிறந்த நங்கைமார் பலரிருந்தனர். அவருள் இவ்வவ்வையாரும் ஒருவர். இவர் கம்பர் காலத்தில் இருந்தனர் என்பது சிலர் கருத்து. தமிழ் நாட்டில் அவ்வையார் எனப் பேர் பெற்றோர் பலரிருந்தனரெனச் சிலரும், அவ்வையார் ஒருவரே அதியமான் என்னும் அரச வள்ளல் கொடுத்த நெல்லிக்கனியை உண்டு பன்னாள் உயிர் வாழ்ந்திருந்தனர் எனச் சிலரும் கூறுகின்றனர். இவ்வம்மையாரைச் சரஸ்வதி என்றே கருதிச் சிலர் வழிபடுகின்றனர். தென்னாட்டில் இவர் பேரால் நோன்பு ஒன்று இன்னும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வன்னையார் பாடல்களில் நன்னீதிகளும், உயர் கருத்துகளும் அடங்கியிருக்கும். பிள்ளைகளின் பருவத்திற்கும், அறிவிற்கும் ஏற்றவாறு சொற்றொடர்களையும் பொருளையும் உயர்த்திக்கொண்டே செல்வதில் இவர் வல்லுநர். இவர் இயற்றிய நூல்கள் ஆத்தி சூடி, கொன்றை

வேந்தன், மூதுரை, நல்வழி முதலியன ; தனிப்பாடல்களும் சில உண்டு.

நம் தமிழ் நாட்டில் தமிழ் படிக்கத் தொடங்கும் ஒவ்வொரு சிறுவரும் முதல் முதலில் அவ்வையார் செய்த பாடல்களையே கற்பது வழக்கம். நீங்களும் கீழ்வகுப்புகளில் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் முதலிய இவர் செய்த சில சிறு நூல்களைப் படித்திருப்பீர்கள் ; இன்னும் மேல் வகுப்புகளிலும் சில நூல்களைப் படிக்கக் கூடும். நம்நாட்டிலுள்ள கல்லாதவர், கற்றவர் ஆகிய யாவருக்கும் நம் மூதாட்டியாரைப்பற்றி நன்கு தெரியும். நம் தமிழ் நாட்டில் இவ்வளவு கல்விகற்ற பெண்மணிகளும் இருந்தார்கள் என்பதை அறிய நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது! இது நமக்குப் பெருமையினும் பெருமையே! இந்த விதமான பெருமையை நீங்களும் அடைய வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? இவரைப் போன்றே கல்வி கற்று, முன்னுக்கு வர முயலல் நலமல்லவா?

நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

அனுவயம்

எல்லாச் செய்யுட்களிலும் பொருளுக்கு ஏற்றவாறு சொற்கள் வரிசையாக அமைந்திருப்பதில்லை ; முன்னும் பின்னுமாக இருக்கும். அப்படி இருக்கும் செய்யுட்களின் சொற்களைப் பொருளுக்கேற்ப மாற்றியே பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறு முறைப்படுத்தாவிடில், பொருள் அழகாக அமையாது. அப்படி முறைப்படுத்துவதைத்தான் அனுவயம் அல்லது வாசக நடை என்று கூறுகிறோம்.

**உ-ம்.** நின்று, தளரா, வளர், தெங்கு, தாள், உண்ட, நீரை, தலையாலே, தான், தருதலால், ஒருவற்கு,

நன்றி, செய்தக்கால், அந்நன்றி, 'என்று தருங்கொல்?' எனவேண்டா.

குறிப்பு:—தெங்கு - தென்னை, தளரா - சோராமல், செய்த்தக்காலந்நன்றி - செய்தக்கால் + அ + நன்றி.

## பொழிப்பு

தளராமல் நிலைபெற்று வளரும் தென்னை மரம், தன் தாளாகிய வேரினால் உண்ட சுவையற்ற நீரை வளர்ந்த பிறகு தன் தலையாலே நல்ல சுவையுள்ள இளநீராகத் தருவதனால், சற்குணம் உடையவனுக்கு ஓர் உதவியைச் செய்யின், அவ்வுதவியை அவன் எப்போது செய்வானோ என ஐயங் கொள்ள வேண்டா.

அவன் தென்னையைப் போன்று கட்டாயமாக நமக்குச் செய்தே தீருவன்.

## வினாக்கள்

1. தெங்குக்குத் தாள் எது? தலை எது?
2. தெங்கு, நீரை எப்படி உண்கிறது? எப்படித் தருகிறது? இரு வகை நீருக்கும் உள்ள வேறுபாடு என்ன?
3. ஒருவன் என்றது யாரை?
4. நற்குணமுடையவர்க்குச் செய்த உதவி பயன் அளிக்கும் என்பதை நாம் எதனால் அறிகிறோம்?
5. தேங்காய்க்கு மற்றொரு பெயர் என்ன?
6. தென்னை மரத்தின் உயரமென்ன?

நல்லா ரொருவர்க்குச் செய்த உபகாரங்
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

பொழிப்பு

நற்குணமுடையவர்க்கு நாம் செய்த உதவி, கருங் கல்லின்மே லெழுதிய (செதுக்கப்பட்ட) எழுத்தைப்போல என்றும் அழியாது காணப்படும் (தோன்றும்). நற்குணமும், கருணையும் இல்லாத மனமுடையவர்க்குச் செய்த உதவி நீர் மேல் எழுதிய எழுத்தைப் போன்று அப்போதே அழிந்துவிடும்.

குறிப்பு :—ஈரம் இலா - அன்பு இல்லாத, ஈந்த - செய்த, நேர் - சமம்.

விஞக்கள்

1. கல்மேல் எழுத்து, நீர்மேல் எழுத்து இவைகளின் தன்மைகள் யாவை?
2. நல்லார் எவ்வித நெஞ்சத்தினராயிருப்பர்?
3. 'அல்லாத' என்னும் சொல் எதைக் குறிக்கிறது?
4. 'உபகாரம்'—இதற்கு வேறு பெயர் கூறு.
5. 'நேர்' என்பது இங்கு என்ன பொருளில் இருக்கிறது?
6. 'காணும்'—எது? எப்படி?

அட்டாலும் பால்சுவையிற் குன்ருது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

பொழிப்பு

(மக்களுக்குப் பல வகையிலும உணவாக இருக்கும்) பாலை வற்றக் காய்ச்சிஞலும், அது தன் இனிய சுவையில் குறைவுபடாது. வெண்மை நிறம் பொருந்திய சங்கைச் சுட்டுத் துகளாக (பொடியாக)ச் செய்தாலும் அது வெண்மையான நிறத்தையே காட்டும். அறிவு ஒழுக்

கங்களில் மேன்மையுற்ஞேர், வறுமை முதலியவற்ருல் தாழ்வடைந்தாலும், செய்கைகளில் மேலோராகவே விளங்குவர். சிநேகத்திஞல் பிறரோடு கூடி வாழும் நற்குணமற்ற கீழோருடன் மனங் கலந்து நட்புக் கொண்டாலும், அவர் உண்மை நண்பராகார்.

குறிப்பு :—அளவளாய் - கலந்து, நட்டாலும் - சிநேகம் செய்தாலும்.

## விஞக்கள்

1. மேன்மக்களுக்கு எவைகள் ஒப்பிடப்பட்டிருக்கின்றன ?
2. எப்போது மேன்மக்களின் சிறப்பு அதிகமாய்த் தோன்றும்?
3. இச்செய்யுளில் எத்தனை விஷயங்கள் இருக்கின்றன ?
4. இதில் சிறந்த விஷயம் எது ?
5. எப்பேர்ப்பட்டவர்களிடம் நாம் நட்புக்கொள்ளுதல் நல்லது?
6. சுடுவதனுல் கறுப்பாகும் பொருள்கள் எவை ?
7. விட்டான் என்பதற்கு முதல் நிலை விடு என்பது. அப்படியானல், அட்டாலும், கெட்டாலும், சுட்டாலும் இவற்றிற்கு முதல் நிலைகள் எவை ?
8. "அடினும் ஆவின் பால் தன் சுவை குன்ருது; சுடினும் செம்பொன் தன்னெளி கெடாது."—இவைகள் எந்த அடிகளுக்கு ஒப்பாயிருக்கின்றன ?
9. இச்செய்யுளில் குறிப்பிட்டிருக்கும் மேலோர், கீழோர் ஆகிய இருவரில் யாருக்குத் தக்க உதாரணங்கள் கூறப்பட்டுள்ளன ?
10. இச்செய்யுளை அனுவயப்படுத்துக.

அடுத்து முயன்ருலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. 4

### பொழிப்பு

கிளைகளால் தழைத்து வடிவத்தால் உயர்ந்த மரங்கள் யாவும் பழுக்குங் காலம் வந்தாலன்றிப் பழுக்கமாட்டா. அடுத்தடுத்து முயன்றாலும் முடிகின்றகாலம் வந்தாலன்றி நாம் எடுத்துக்கொண்ட காரியங்கள் முடிவதில்லை.

ஆதலின், கைகூடும் காலத்தை ஆராய்ந்தே எந்தக் காரியத்தையும் தொடங்குதல் நல்லது.

குறிப்பு :—தொடுத்த - கிளைத்த, பருவம் - தகுந்த காலம்.

### வினாக்கள்

1. ஒரு காரியம் முடிவு பெறுங்காலம் வரும்வரையும் முயலாமல் இருக்கலாமா ?
2. மரம் உயர்ந்து வளர்ந்த உடனே பயன் தருகின்றதா ? ஏன் ?
3. நீண்டு வளர்ந்த மரங்கள் எவையேனும் இரண்டைச் சொல்லு.
4. மரங்களுக்குக் கைகள் உண்டா ? அவை எவை ?
5. 'பருவம்' என்பது இங்கு என்ன பொருளில் இருக்கிறது ?

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்ப துவுநன்றே — நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே அவரோ(டு)
இணங்கி யிருப்பதுவு நன்று. 5

### பொழிப்பு

நற்குணமுடைய நல்லோரைப் பார்ப்பதும் நல்லது. நன்மை மிகுந்த மேலோரின் பயனுடையசொற்களைக் கேட்பதும் நல்லது. சான்றோர் அருள் நிறைந்த குணங்களை எடுத்துக் கூறுதலும் நல்லது. அப்பெரியாருடன் சேர்ந்து வாழ்வதும் நன்மையையே அளிப்பதாகும்.

இவற்றால் நல்லறிவையும், நல்லொழுக்கத்தையும் பெறலாம் என்பது திண்ணம்.

குறிப்பு :—இணங்கி - கூடி.

வினாக்கள்

1. நல்லாருடன் நமக்கு எத்தனை வகையான உறவுகள் நல்லவை?
2. சுத்தமான இடத்தில் இருப்பதும் நன்று, சுத்தமான தின்பண்டங்களை உண்பதும் நன்று. இவற்றால் நல்ல காற்று, நோயற்ற வாழ்வு இவைகளைப் பெறுகிறோம். இவற்றைப் போன்று நல்லாரைக் காண்பது முதலியவற்றால் நமக்கு என்ன பயன் உண்டாகும்?
3. நல்லாருக்கு எதிரிடையானவர் யார்?
4. 'நல்லார்' என்னும் சொல்லை எடுத்துவிட்டு, எதிரிடையான சொல்லை வைத்து, இக்கருத்தையே கொண்ட ஒரு செய்யுளைச் சொல்லு.
5. எத்தகையோரை நாம் நல்லவர் எனக் கூறுகின்றோம்?

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யு மழை. 6

பொழிப்பு

நெற்பயிருக்கெனப் பாய்ச்சிய தண்ணீர் கால்வாயின் வழியாகப் பாய்ந்து, அந்நெற்பயிருடன் சேர்ந்திருக்கும் புல்லுக்கும் கசிந்தூறும். பழைய இவ்வுலகில் நல்ல மனமுடையவர் ஒருவர் இருப்பினும், அவர் நிமித்தமாகத் தீயோருக்கும் மழை பெய்யும்.

இதனால், சற்குணமுடையவரைச் சேர்ந்த தீயோரும் நன்மையடைவர் என அறிகிறோம்.

குறிப்பு :—வாய்க்கால் - கால்வாய், தொல்லுலகில் - பழமையாகிய இவ்வுலகில், பொசியும் - கசிந்து ஊறும், பெய்யும் + மழை = பெய்யுமழை.

## வினாக்கள்

1. நல்லாருக்கு எது ஒப்பிடப்பட்டிருக்கிறது ?
2. நெல்லுக்கு எங்கிருந்து எப்படி நீர் இறைப்பர் ?
3. நீர் இறைப்பதையும், நீர் பாயும் முறையையும் ஒரு படம் வரைந்து காட்டு.
4. மழை எப்படி உண்டாகிறது ?
5. கன்றீன்ற பசு, பால் கொடுக்குமாம். 'கொடுக்குமாம்' என்பதில் கொடுக்கும் என்னும் சொல் மட்டுந்தான் நமக்கு வேண்டும். ஆம் என்பது வேண்டுவதில்லை. செய்யுள் ஓசை சரியாக வருவதன்பொருட்டு அச்சொல் அமைந்து உள்ளது. இப்படியிருக்கும் சொல்லை அசை என்று சொல்லுகிறோம். இதற்குப் பொருளில்லை. இப்படிப்பட்ட சொல் ஒன்றை இச்செய்யுளில் கண்டு பிடி.
6. சிவப்புத் துணி:—துணியைச் சிறப்புப்படுத்த வந்த சொல் சிவப்பு. இது துணி என்ற சொல்லை அடுத்துள்ளது. இதற்கு அடைமொழி என்று பெயர். உலகு என்று சொல்லாமல் **தோல்**லுலகு என என் சொல்லப்பட்டுள்ளது? **தோல்** என்பதை என்னமொழி என்று சொல்லலாம்?

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நல் மரம். 7

### பொழிப்பு

கிளைகளையும், கொம்புகளையும் பெற்றனவாய்க் காட்டினிடத்தே நிலைபெற்றிருக்கும் பெரிய மரங்கள் யாவும் சிறந்த மரங்களல்ல. கற்றோர் நிறைந்த சபையின் நடுவே பெரியார் நீட்டிய ஓலையை வாசிக்கத் தெரியாமல் நின்றவனும், பிறர் கருத்தின் குறிப்பை அறியமாட்டாதவனுமே நல்ல மரங்களாவார்கள்.

### வினாக்கள்

1. மரத்திற்கும், மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?
2. யார் யார் நல்ல மரங்கள் ? ஏன் ?
3. 'வாசியா' என்னும் சொல்லைப்பற்றி உனக்கென்ன தெரியும் ?
4. ஏன் இவர்கள் நல்ல மரம் எனக் கூறப்பட்டார்கள் ?
5. அதுவல்ல நல்ல மரங்கள் என்றிருந்தால் வரும் பிழை என்ன?
6. மரத்தினால் நமக்குண்டாகும் பயன் இரண்டைக் கூறு.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 8

### பொழிப்பு

கற்க வேண்டிய நூல்களை முறையாகக் கல்லாதவன், கற்றவர்களிடமிருந்து ஒரு கவியைக் கற்றுக்கொண்டு தானே சொல்வதுபோலச் சொல்லல், காட்டிலுள்ள மயில் தன் அழகிய சிறகை விரித்து ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த வான்கோழி தன்னை அந்த மயிலாகவே பாவித்துத் தன் அழகற்ற சிறகை விரித்தாடுவதற்கு ஒப்பாகும்.

குறிப்பு :—பாவித்து - நினைத்துக்கொண்டு.

### வினாக்கள்

1. மயிலுக்கும் வான்கோழிக்கும் உள்ள வேற்றுமை என்ன ?
2. 'அதுவாக' என்பது எதைக் குறிக்கிறது ?
3. கவி யாருக்கு நன்றாக வரும் ? கல்லாதவனுக்குக் கவி எப்படி வருகிறது ?
4. கல்லாதவன் கவி பாடுவது எதைப்போன்றது ?
5. எங்கே இருக்கிற வான்கோழி ? இதை நீ எப்படி அறிகிறாய்?
6. தானும் என்றது எதை ?
7. இச்செய்யுளை அநுவயப்படுத்து.

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. 9

பொழிப்பு

நீர் ஓடும் மதகினிடத்தில் சிறு மீன்கள் பல ஓடிக் கொண்டிருக்கத் தன் இரைக்குத் தகுந்த பெரிய மீன் வரு மட்டும் அங்குள்ள கொக்கு அடக்கமாகக் கரையில் நின் றிருக்கும். சிலர் தம் வன்மைக்கேற்ற பகைவர் கிடைக்கு மட்டும் அடங்கியிருப்பர். அவரை அறிவற்றவரென நினைத்து வெல்ல எண்ணுதல் வேண்டா.

அங்ஙனம் நினைத்தல் கெடுதியைத் தருவதாகும்.

குறிப்பு:—கடக்க – வெல்லுதற்கு, மடைத்தலையில்-நீர் மடையில், உறு மீன் - (இரையாதற்கேற்ற) பெரிய மீன்.

விஞக்கள்

1. கொக்கு ஏன் சிறு மீன்களை உண்ணாமல் அடக்கமாய் இருக்கிறது?
2. அடக்கமுடையார் எதுவரையில் அந்த அடக்கத்தை மேற்கொள்ளுவார்?
3. ‘வேண்டா’ என்பது என்ன சொல்?
4. ‘உறு மீன்’ - இதற்குப் பொருள் என்ன?
5. கொக்கின் நிறமென்ன? அஃது எங்கே வாழும் பறவை?
6. ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்: (உ-ம்) கிளி, மரம், பெட்டி, கமலம், கந்தன். இந்தச் செய்யுளிலுள்ள இரண்டு பெயர்ச்சொற்களைச் சொல்லு.
7. இச்செய்யுளை அநுவயப்படுத்து.

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகு மென்னாகு
மண்ணின் குடமுடைந்தக் கால். 10

பொழிப்பு

மேன்மக்கள் தரித்திரமடைந்தாலும் அவர்கள் குணமும் செய்கையும் வறுமையடையாமையின், அவர்கள் மேன்மையுடையவர்களேயாவார்கள். கீழ்மக்கள் வறுமையடைந்தால் அவர்கள் குணஞ் செயல்கள் என்னவாக மாறும்? சிறந்த பொன்னினால் செய்த குடம் உடைந்தால் பொன்னேயாகிப் பயன் தரும். மண்குடம் உடைந்தால் என்ன பயனைக் கொடுக்கும்?

குறிப்பு :—சீரியர் - மேன்மக்கள்.

வினாக்கள்

1. 'சீரியர் கெட்டாலும் சீரியரே,' இதற்கு முன் படித்த செய்யுளிலிருந்து ஓர் உதாரணம் காட்டு.
2. இச்செய்யுளில் பொருளில்லாத வார்த்தை எது? அதன் பெயரென்ன?
3. இதில் நாம் எளிதில் அறியக் கூடியது எது?
4. உடைந்த பொன் குடம் எப்படிப் பொன்னாகும்?
5. மண்ணைக் குடமாக்குகிறவன் யார்? அஃது எப்படிக் குடமாகிறது?

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி — உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு. 11

பொழிப்பு

நோய் உடலுடன் தோன்றியே அவ்வுடலைக் கொல்லும். ஆதலால், நம் கூடப் பிறந்தவர் யாவரையும் நமக்கு நன்மை செய்யும் சுற்றத்தார் என நினைத்துவிடல் கூடாது. உடலுடன் பிறவாத பெரிய மலையிலுள்ள மூலிகைகளாகிய மருந்தே உடலில் பிறந்த நோயை நீக்கும். அம்மருந்தைப் போன்று உதவி புரிகின்ற சில அயலாரும் உண்டு.

வினாக்கள்

1. சுற்றம் என்பதற்கு வேறு பெயர் ஒன்று சொல்லு.
2. இப்பாட்டில் ஈறு கெட்ட சொற்கள் எவை?
3. உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்ற அபிப்பிராயம் சரியா? பிழையா? இவற்றை உதாரணத்துடன் நிலை நாட்டு.
4. மாமலையில் என்ன மருந்துள்ளது?
5. அதை இப்போது நாம் கையாளுகிறோமா?
6. அம்மருந்து போல்வார் யார்?
7. கெடுதி செய்கின்ற சுற்றத்தாருக்கு எஃது ஒப்பிடப்பட்டிருக்கிறது?

இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். 12

பொழிப்பு

நற்குண நற்செய்கைகளில் சிறந்த மனைவி வீட்டிலிருப்பின், அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை. (அப்படிப்பட்ட) மனைவி இல்லாமற் போனாலும், இருந்தும் கடுமையான சொற்களைச் சொல்லுபவளாய் இருந்தாலும்,

அந்த வீடு கொல்லும் தொழிலையுடைய புலி வசிக்கும் புதராய்விடும்.

குறிப்பு :—வலி கிடந்த மாற்றம் - கடுமை பொருந்திய சொற்கள், தூறு - புதர்.

வினாக்கள்

1. மனைவிக்கு இல்லாள் என ஏன் பெயரமைந்தது ?
2. அகத்திற்கு என்பதைச் சிலர் இப்போது எப்படிச் சொல்லுகின்றனர் ?
3. இச்செய்யுளில் அசைச் சொல் எது ?
4. எவ்விதமான வீடு புலி கிடந்த தூறாய்விடும் ?
5. வலி கிடந்த மாற்றம் என்பதற்குப் பொருள் என்ன ?
6. ஏன் இது புலி கிடந்த தூறு எனக் கூறப்பட்டுள்ளது ?
7. பெயர்ச்சொல் ஒன்றைக் குறிப்பிடு.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு. 13

பொழிப்பு

அரசன், குற்றமற்ற கல்வி கற்ற புலவன் ஆகிய இருவருடைய சிறப்பையும் ஆராய்ந்து நோக்கினால், மன்னனைக்காட்டிலும் கற்றவனே சிறப்புடையவனாவன். ஏனெனில், அரசனுக்குத் தன் தேசம் தவிர மற்ற இடங்களில் பெருமை உண்டாவதில்லை. கற்ற புலவனுக்கோ, சென்ற எல்லாத் தேசங்களிலும் மிக்க பெருமை உண்டாவது திண்ணம்.

வினாக்கள்

1. கற்றோனுக்கு எங்கும் சிறப்புண்டாதற்குக் காரணம் என்ன?
2. மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் எப்படி ?

3. 'சீர் தூக்கின்' என்பதற்குப் பொருளென்ன ?
4. 'எக்குடிப் பிறப்பினும், யாவரேயாயினும், அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்.'—இச்செய்யுள் உங்கள் செய்யுளின் எந்த அடியின் பொருளைக் கொண்டிருக்கிறது ?
5. நாம் எப்படிக் கற்றல் வேண்டும்? ஏன்?
6. பொருளினால் அடையும் சிறப்பிற்கும், கல்வியினால் அடையும் சிறப்பிற்கும் உள்ள வேறுபாடு என்ன ?
7. 'கற்றோர்க்கு' - இதிலுள்ள வேற்றுமை உருபு எது ? முதல் வேற்றுமையிலுள்ள பெயர்ச்சொல் எது ?

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 14

பொழிப்பு

நல்ல கல்வி அறிவில்லாத மக்களுக்குக் கல்விகற்றுப் பொருள்களை உணர்ந்தவருடைய உறுதிச் சொல் துன்பத்தைத் தரும். தருமத் தொழிலை விரும்பாமல் பாபத் தொழிலையுடைய மக்களுக்குத் தருமமே துன்பம் தருவதாகும். மென்மையான வாழைமரத்திற்கு அஃது ஈன்ற காயே எமனாய்த் துன்பம் தருவதாகும். இல்லற வாழ்க்கைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளாத மனைவியே கணவனுக்கு இன்னலைத் தரும் எமனாவாள்.

குறிப்பு :—கூற்றம் - எமன்.

வினாக்கள்

1. எமன் நம் உயிரையும் உடலையும் என்ன செய்கிறான் ?
2. அவனுக்கு இங்கே என்ன பெயர் சொல்லியிருக்கிறது ?
3. வாழைக்கு ஏன் தானீன்ற காயே கூற்றமாகிறது ?
4. வாழை மரத்தை வெட்டாமல் விட்டுவிட்டால் உண்டாகும் குற்றம் என்ன ?

5. இச்செய்யுளில் சொல்லப்பட்ட பொருள்கள் எத்தனை ?
6. ஈறுகெட்ட சொல் எது ? ஒரு பொருளின் தொழிலை (வேலையை)க் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். அத்தகைய சொல் ஒன்றை இச்செய்யுளில் குறிப்பிடு.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். 15

பொழிப்பு

வரிகளையுடைய வேங்கைப் புலியின் விஷ நோயைப் போக்கிய விஷவைத்தியன் அப்போதே அப்புலிக்கு உணவானதுபோல, நன்றியை அறியும் அறிவற்ற அற்ப அறிவினர்க்குப் பிறர்செய்த உதவியானது கருங்கல்லின்மேல் போட்ட மண் கலத்தைப் போன்று பயனற்றதாகும். அன்றியும், அஃது அழிந்தும் போகும்.

குறிப்பு:—விடகாரி - விடத்தை நீக்கும் வைத்தியன், பாங்கு அறியா - நன்றி அறிவில்லாத, புல் அறிவாளர்க்கு - அற்ப அறிவினருக்கு.

வினாக்கள்

1. புலிக்கு ஒப்பான வேறு பிராணி எது?
2. இவை இரண்டிற்கும் உள்ள வேற்றுமை என்ன ?
3. இங்குச் சொன்னது என்ன கலம் ?
4. எத்தனை வகையான கலங்கள் உண்டு ?
5. ஏன் வேறு ஏதாவது கலத்தை இங்குக் கூறவில்லை ?
6. சாக பட்சணி, மாமிச பட்சணி என மிருகங்கள் இருவகைப்படும். இவற்றுள் புலி எந்த வகையைச் சேர்ந்தது ?
7. இங்குப் புலிக்கு உள்ள கெட்ட குணம் எது ?
8. 'தீர்த்த'—இதன் முதல் நிலை என்ன ?

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். 16

பொழிப்பு

தாழம்பூவின் இதழ்கள் மிகப் பெரியன. மகிழம் பூவின் இதழ்கள் மிகச் சிறியன. ஆயினும், மகிழம்பூவே மணத்தில் மிகவும் இனிமை உள்ளது. கடலானது மிகப் பெரிது. ஆனால், அஃது உடம்பு கழுவுதற்கும் பயன்படுவதில்லை. அதன் அருகில் உள்ள மணற்குழியில் ஊறுகின்ற ஊற்றோ, உண்பதற்கும் தக்க நீராகிறது. ஆதலின், உடலால் சிறியவரென்று நினைத்து, ஒருவரை அசட்டை செய்ய வேண்டா.

உடலால் பெரியவர் அறிவால் சிறியவராயும், உடலால் சிறியவர் அறிவால் பெரியவராயும் இருத்தலுங் கூடும்.

குறிப்பு:—மகிழ் - மகிழம்பூ, கந்தம் - மணம், மண் நீரும் ஆகாது - கழுவுதற்குத் தக்க நீருமாகாது.

வினாக்கள்

1. தாழை, மகிழம்பூ இவற்றின் நிறமும் உருவமும் எவை?
2. மல்லிகைப் பூவிற்கும், மகிழம் பூவிற்கும் என்னென்ன விதத்தில் வித்தியாசம் உண்டு?
3. சிற்றூறல் யாருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது?
4. சிற்றூறல் நீர் எத்தகைய நீராய் இருக்கும்?
5. மண் என்பது இங்கு என்ன பொருளில் இருக்கிறது?
6. கடலருகே ஊற்று உண்டாவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
7. 'சிற்றூறல்'—இதில் அடைமொழி எது?

## 2. நல்வழி

(ஔவையார்)

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 1

### பொழிப்பு

சொல்லும்போது உலகில் சாதிகள் இரண்டு தவிர வேறில்லை. நீதி தவறாமல் நல்ல வழியில் நின்று முறையோடு வறியவர்க்குக் கொடுத்தார் உயர் குலத்தோர். அவ்வாறு கொடாதார் தாழ்ந்த குலத்தோர். இவையே உண்மை நூலில் சொல்லுகின்ற சாதிகளின் பிரிவாகும்.

குறிப்பு:—சாற்றுங்கால் - சொல்லும்போது, மேதினி - பூமி, பட்டாங்கில் - உண்மை நூலில்.

### வினாக்கள்

1. நம்மவர் சொல்லுகின்ற சாதிகள் எவை? உண்மை நூல்கள் சொல்லுகின்ற சாதிகள் எவை?
2. நாம் யாருக்குத் தருமம் செய்ய வேண்டும்?
3. பிறருக்கு எந்த முறையில் தருமம் செய்தல் நல்லது?
4. 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்பதற்குப் படியாதவர்கள் கூறும் பொருள் என்ன?
5. 'வழுவா' என்பது என்ன சொல்?
6. 'இட்டார்'—இதில் முதல் நிலை என்ன?

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா--இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 2

பொழிப்பு

வாராதவைகளைப் பலமுறை வருந்தி அழைத்தாலும் வாரா. நம்மை வந்து அடைவனவற்றைப் 'போய்விடுங்கள்,' எனப் பல முறை தள்ளினாலும் போகா. (இவ்வுண்மையை யாவரும் அறிவதில்லை. ஆதலால்) மிக வருந்தி, மனம் நொந்து புண்படுமாறு நெடுநேரம் சிந்தித்து, ஒரு நாளைக்கு இறத்தலே மக்கள் தொழிலாய் இருக்கிறது.

மக்கள் இன்பதுன்பங்களை அனுபவித்தல் ஊழ்வினையின் பயனாகும். இவற்றில் விருப்பு அன்றி வெறுப்புக் கொள்ளல் பயனற்றது.

குறிப்பு :—துஞ்சுவதே-மாண்டு போவதே, மாந்தர்-மனிதர்.

வினாக்கள்

1. எதை வருந்தியழைப்போம்? எதைப் போ என்று தள்ளுவோம்?
2. "உண்பது நாழி; உடுப்பதுநான்கு முழம்; எண்ணுவன எண்பதுகோடி."—இச்செய்யுளில் இக்கருத்துள்ள சொற்களை எடுத்துக் காட்டு.
3. இன்பமும் துன்பமும் தாமாகவே வருவதற்குக் காரணம் என்ன?
4. துஞ்சுவது என்பதற்கு இரு பொருள் கூறு.
5. நெஞ்சத்தின் வேலை என்ன?
6. பெயர்ச்சொற்கள் இரண்டைக் குறிப்பிடு.

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 3

பொழிப்பு

இவ்விசாலமான உலகில் உள்ள மக்களே, மரண மடைந்தவர்க்காக நீங்கள் பல வருடம் வரையும் அழுது புரண்டாலும் அவர் உயிருடன் வருவரோ? ஆதலின், அதற்காகத் துன்பத்தைக் கொள்ள வேண்டா. நமக்கும் அம்மரணமே வழியாகும். ஆகவே, 'நாம் இறக்குமட்டும் இதை எண்ணுவதில் பயன் என்ன?' என நினைத்து, வறியார்க்கு இட்டு, நீங்களும் உண்டு, மகிழ்வுடன் இருங்கள்.

வினாக்கள்

1. நமக்கு இவ்வுலகத்தில் மிக்க துன்பம் தருவதும், நம்மால் தடுக்க முடியாததும் எது?
2. அழ வேண்டா என்றது ஏன்?
3. இவ்வுலகில் இருக்குமளவும் அவசியமாக நாம் செய்ய வேண்டுவன யாவை?
4. இவ்வுலகில் என்றும் இறவாமல் சிரஞ்சீவியாயிருக்கின்றவர் யாரேனும் உண்டா? அவருள் இரண்டுபேரைக் குறிப்பிடு.
5. மனிதன் எப்போது மாண்டவன் எனச்சொல்லப்படுகிறான்?

ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 4

பொழிப்பு

துன்பத்தை மிகுதியாகத் தருகின்ற என் வயிறே, கிடையாத போது, 'ஒரு நாளின் உணவை விட்டிரு,' என்றால் நீ விடாய்! கிடைத்த போது, 'இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவை ஏற்றுக்கொள்,' என்றால் ஏற்றுக் கொள்ளாய்! யான் படும் துன்பத்தை ஒருபோதும் அறிய மாட்டாய்! ஆதலின், இப்படிப்பட்ட தொல்லைகளைத் தரும் உன்னோடு வாழ்தல் எனக்குக் கூடாத காரியம்.

குறிப்பு:—ஏல் - ஏற்றுக்கொள், இடும்பை கூர் - துன்பம் மிகுகின்ற.

வினாக்கள்

1. இச்செய்யுள் எதைப் பார்த்துக் கூறப்படுகிறது?
2. உணவில் அதிகமும் குறைவும் ஏற்பட்டால் என்ன ஆகும்?
3. ஒரு நாளுணவை ஒழித்தல், இரு நாளுணவை ஏற்றல் இவ்விரண்டில் செய்ய முடியாதது எது?
4. 'உன்னோடு வாழ்தல் அரிது' எனச் சொல்வது எப்படிப்பட்டவரைப் பார்த்துச் சொல்வது போல இருக்கிறது?
5. பசியை நோய் என்று சொல்லுதற்குக் காரணம் என்ன?
6. வயிற்றிற்கு அடைமொழிகள் எவை?

தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி. 5

பொழிப்பு

தண்ணீர் நிலத்தின் தன்மையினால் தூய்மை அடையும். சான்றோருடைய குணம் தருமத்தினால் மேன்மை அடையும். கண்ணின் இயல்பு, நீங்காத அருளினால் (கருணை

யினால்) சீர்மைபெறும். பெண்ணின் இயல்பு கற்பிலிருந்து தவறாத முறையினால் பெருமை பெறும். இவைகள் கடலினால் சூழப்பட்ட இவ்வுலகில், யாவரும் அதிசயிக்கத் தக்க சிறப்புகளென நீ அறிவாயாக.

குறிப்பு :—கொடை - தர்மம், கண் + நீர்மை - கண்ணீர்மை, மாறாக் கருணையால் - நீங்காத அருளினால்.

## வினாக்கள்

1. பெண்களுக்கு மேன்மை உண்டாதல் எதனால்?
2. கொடை, குடை - இவற்றின் பொருள் யாவை ?
3. கற்பைப்பற்றிக்கொன்றைவேந்தனில் சொல்லப்பட்ட செய்யுள் எது ?
4. மக்கள் எப்போது கெடுகின்றார்கள் ?
5. ஒருவர் கருணையுள்ளவர் என்பதை அவருடைய எந்த அவயவத்தினால் அறியலாம்?
6. முதல் நிலை, பகுதி இவை இரண்டும் ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள். பகுதி என்பது ஏவலாகவும், அச்சொல்லின் பொருளைக் காட்டுவதாகவும் இருக்கும். கொடை என்பதற்கு முதல் நிலை என்ன ?

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் — வையத்(து)
அறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 6

## பொழிப்பு

இவ்வுலகில் அறத்தினால் பாவம் நீங்குமென அறிந்து, பொருளும் இளமையும் அமைந்திருந்த அக்காலத்தில் ஏழைகளுக்குக் கொடாதார்க்கு, அவர் செய்த பாவம் வறுமைக்கு விதையாய் இருக்கும். அவ்வாறு இருக்க, வறுமை

வந்த பொழுது தீவினையைச் செய்த தன்னை நோவாமல் தெய்வத்தை நோதலினால் மிக்க செல்வம் அடைதற்குக் கூடுமோ! ஒன்றுமில்லாத பானையை அடுப்பில் வைத்து எரித்தால், அது மேலே பொங்கி வழியுமோ?

குறிப்பு :—இருநிதியம் - மிக்க திரவியம்.

வினாக்கள்

1. எந்தப் பானை பொங்கும்?
2. ஒருவருக்கு இருநிதியம் வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?
3. நம் வறுமைக்காக எதை நோக வேண்டும்?
4. 'எய்த வருமோ இருநிதியம்' - எதைப் போல?
5. இச்செய்யுளை வாசக முறையில் அனுவயமாக மாற்றுக.
6. மட்பானையைச் சூளையிலிட்டுச் சுடுவதற்கு முன் என்னென்ன விதமாக அதைப் பக்குவப்படுத்த வேண்டும்?

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம். 7

பொழிப்பு

வயிற்றின் பசிக் கொடுமையினால் நாழி அரிசியைத் தேடுதற்கே, பிறருக்கு அடிமைத் தொழில் செய்தும், ஒருவரிடம் சென்று யாசித்தும், தெளிந்த நீரையுடைய கடலைத் தாண்டி வேறு தேசம் சென்றும், சிறியோரைப் பெரியோராக நினைத்தும், பூமியை ஆண்டும், செல்வரைப் புகழ்ந்து பாடியும், இவ்வுடலை நாம் வீணாக்கச் செலுத்திக்கொண்டிருக்கிறோம்.

இங்ஙனம் உணவு தேடுவதிலேயே காலத்தைக் கழித்தல் அறியாமை ஆகும்.

குறிப்பு:—தெண்ணீர் = தெள் + நீர் - தெளிந்த நீர், பாவித்தும் - நினைத்தும், போவிப்பம் - செலுத்துவோம்.

## வினாக்கள்

1. வயிற்றின் கொடுமை எது?
2. உணவு தேடுவதிலேயே காலம் கழித்தல் நம் உயிருக்குப் பயனளிக்குமா?
3. ஆனால், வயிற்றிற்கு உணவிடாமலே இருக்கலாமா?
4. அப்படி இருந்தால் உடல் என்ன ஆகும்?
5. நாழி அரிசி என்பது எவ்வளவு?
6. பசி வந்தபோது நமக்குண்டாகும் ஒரு கொடிய குணத்தைச் சொல்லு.
7. இச்செய்யுளை வாசக முறையில் மாற்று.

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான். 8

## பொழிப்பு

செந்தாமரை மலரைத் தனக்கு இருப்பிடமாக உடைய திருமகள் வஞ்சனையற்ற தூயோருக்கு நீர் வளத்தையும் நிழல் பெருக்கையும், நிலம் நிறையும் நெற்போரையும், நல்ல பேரையும், கீர்த்தியையும், கம்பீர வாழ்வையும், செழிப்புற்ற ஊரையும், வளரும் செல்வத்தையும், நீண்ட ஆயுளையும் எப்பொழுதும் தந்தருளுவள்.

குறிப்பு:—வருந்திருவும் - வளர்கின்ற செல்வமும், தாமரையாடான் = தாமரையாள் + தான் - திருமகள் தான்.

## வினாக்கள்

1. செந்தாமரையில் திருமகள் இருப்பது போல வெண்டாமரையில் இருப்பவள் யார்?
2. திருமகளுக்கு வேறு பெயர்கள் எவை?
3. திருமகள் எவற்றைக் கொடுப்பள்? யாருக்குக் கொடுப்பள்?
4. மலர்களிலெல்லாம் தாமரை ஏன் சிறந்தது எனக் கூறப்பட்டுள்ளது?
5. தாமரை இலையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
6. சிவந்த என்பது தாமரையைச் சேர்ந்ததா, திருமகளைச் சேர்ந்ததா?
7. "பங்கஜம் படித்தாள்."-இதில் படித்தாள் என்பது பங்கஜத்தின் தொழிலைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இச்செய்யுளிலுள்ள வினைச்சொல்லைக் குறிப்பிடு.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 9

### பொழிப்பு

பெரிதும் வருந்தி உழைத்துத் திரட்டிய பொருளை நீங்களும் அனுபவியாமல், பிறருக்கும் கொடாமல் மண்ணில் ஒளித்து வைத்து அதன் பயனைப் பெருமலே இழந்த மாக்களே, யான் சொல்வதைச் செவிகொடுத்துக் கேட்பீர்களாக: உடலை விட்டு உயிர் போன பின்பு, பொருளால் ஒரு நன்மையும் காணுத பாவிகளே, இவ்வுலகில் அந்தப் பணத்தை அனுவிப்பவர் யாவர்?

குறிப்பு :—மானிடரே - மனிதரே, கூடு - உடம்பு.

## வினாக்கள்

1. பணத்தினால் என்னென்ன நன்மைகளை அடையலாம்?
2. பணத்தைப் புதைத்து வைப்பவர் இங்கு என்னவென்று அழைக்கப்படுகின்றனர்? ஏன்?
3 ‘அந்தப் பணம்’ என்பது எந்தப் பணம்?
4. ‘கூடு’ என்பது எது?
5. ‘ஆவி’ என்பது என்ன? அஃது எதனோடு சம்பந்தப்பட்டு இருக்கிறது?
6. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை முதன்மையாகப் பெற்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும் சொற்கள் சுட்டுச் சொற்கள் என்பதை முன்னரே படித்திருப்பீர்கள். அவ்வாறாயின், இச்செய்யுளிலுள்ள சுட்டுச் சொல் எது?

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 10

## பொழிப்பு

நீதிச் சபையில் பட்சபாதமாகப் பேசினவர் வீட்டில் பேய்கள் சேர்ந்திருக்கும்; வெள்ளை எருக்கு முளைக்கும்; பாதாள மூலி என்னும் கொடி படரும்; மூதேவி குடியாய் இருந்து தன் வாழ்க்கையை நடத்துவள்; அரவங்கள் வாசஞ் செய்யும்.

இம்முறையில் ஓரஞ் சொன்னவரின் குடும்பம் மாத்திரமேயன்றி, அவர் வீடும் அழிந்து ஒழியும்.

குறிப்பு:—பாதாள மூலி-ஒருவகைக்கொடி, சேடன்-பாம்பு, மன்று - நியாய சபை, ஓரம் - பட்சபாதம்.

விணக்கள்

1. எப்படிப்பட்டவர் வீட்டில் பாம்பு முதலியவை குடி புகும்?
2. அந்த வீடு எந்த நிலைமையில் இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?
3. பூக்கும், பூர்க்கும் - இவ்விரண்டில் எந்தச் சொல்சரியானது?
4. சேடன், மனை - இவற்றிற்கு வேறு பெயர்கள் கூறு.
5. மூதேவி எதைத் தருவள்? இதற்கு எதிரிடையானதை அடைய வேண்டுமாயின், யார் அருள் வேண்டும்?
6. 'மன்றோஞ் சொன்னர்'—இதற்குச் சரியான பொருள் என்ன?
7. சொன்னர் - இதில் பகுதி என்ன?

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் — மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. 11

பொழிப்பு

திருநீறு (விபூதி) அணியாத முகம் பாழாகும். நெய் கலந்து உண்ணுத உணவு பயனற்றதாகும். தூய நீரை உடைய ஆற்றைப் பெற்றிராத ஊருக்கு அழகு இல்லையாகும். மனம் வேறுபாடில்லாத (ஒற்றுமையான) உடன் பிறந்தாரை அடைந்திராத உடல் நன்மையற்றதாகும். நற்குண நற்செய்கையையுடைய மனைவியை வாய்க்கப்பெருத வீடு சிறப்பற்றதாகும்.

குறிப்பு:—நீறு - விபூதி, மாறில் = மாறு + இல் - மாறுபாடில்லாத, மடக்கொடி - இல்லறத்திற்குத் தக்க மனைவி.

விணக்கள்

1. உடன் பிறந்தவருக்கு ஏன் துணைவர் எனப் பேரமைந்தது?

2. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்றது எதனால்?
3. எந்த உணவு உடலுக்கு நன்மை தரும்?
4. ஆற்றுக்கும், ஊற்றுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
5. எத்தகைய உடன்பிறப்பாளர் இருத்தல் வேண்டும்?
6. உண்டிக்கு அடைமொழி எது?

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்கும் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானா நாடு. 12

பொழிப்பு

தனக்குக் கிடைத்த முதற் பொருளைக்காட்டிலும் செலவு அதிகமாகச் செய்து பொருளை இழந்தவன், பெருமை குலைந்து, புத்தி இழந்து, சென்ற இடங்களில் எல்லாருக்கும் திருடனாகி, எழுவகைப்பட்ட பிறவிகளிலும் பாவமுடையவனாய்த் தன்னிடம் கருணையுடைய பெண்டிர்க்கும் பொல்லாதவனாவான். இதை நீ ஆராய்ந்து பார்ப்பாயாக.

ஆதலின், பழி பாவங்களுக்கு அஞ்சி வரவிற்குத் தக்கவாறு செலவு செய்தலே நலமாகும்.

வினாக்கள்

1. நாடு என்பது இங்கு என்ன பொருளில் இருக்கிறது?
2. இது பெயர்ச்சொல்லாயிருக்கும்போது என்ன பொருள் தரும்?
3. ஒருவன் ஏன் எல்லார்க்கும் கள்ளனாகிறான்?
4. அளவறிந்து செலவழித்தல் நல்லது என்பதற்குக் கொன்றைவேந்தனிலிருந்து உதாரணம் ஒன்று காட்டு.
5. எந்தெந்தக் காலத்தில் நாம் வரவிற்கு மிஞ்சிச் செலவழிக்கின்றோம்?
6. 'கடனில்லாச் சோறு கால் வயிறு போதும்' என்னும் பழமொழி நமக்கு எதை அறிவுறுத்துகிறது?

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமிங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 13

### பொழிப்பு

மரம் நிறையப் பழங்கள் பழுத்திருப்பின், அவற்றைத் தின்னுதற்கு வௌவாலை வா என்று கூப்பிட்டு வேண்டி அழைப்பவர் ஒருவரும் இவ்வுலகிலில்லை. கன்றையுடைய பசுவானது பாலைச்சுரந்து தருதல் போலத் தம்மிடமுள்ள வற்றை ஒளியாது பிறருக்குக் கொடுப்பாராகில், அவருக்கு உலகத்தவர் யாவரும் உறவினராவர்.

குறிப்பு:—கற்றா = கன்று + ஆ - கன்றையுடைய பசு, கரவாது - ஒளியாமல்.

### வினாக்கள்

1. எந்தப் பசு பாலைத் தரும் ?
2. பழுத்த மரம் யாருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது ?
3. யாருக்கு உறவினர் பெருகுவர் ?
4. 'ஆலிலை பூவுங் காயும் அளிதரு பழமுமுண்டேல் சாலவே பட்சியெல்லாம் தங்குடியென்றே வாழும்' (விவேக சிந்தாமணி) இப்பாட்டில் இக்கருத்துள்ள வரிகளைக்கூறு.
5. 'கற்றா' - இதைப் பிரித்துக் காட்டு.
6. இரந்து, இறந்து - இவ்விரண்டிற்கும் உள்ள பொருள் வேறுபாடு என்ன ?
7. வௌவால் பறவையா ? மிருகமா ?

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 14

## பொழிப்பு

ஒருவன் கல்வி கல்லாதவனாயினும், அவன் கையில் பொருள் மாத்திரம் உண்டாயின், யாவரும் போய் அவனை எதிர்கொண்டழைப்பர். பொருளில்லாதவன் அறிவு நூல்களைக் கற்றவனேயாயினும், அவனைச் சொந்த மனைவியும் விரும்பாள். அன்புடன் பெற்றெடுத்த தாயும் விரும்பாள். அவன் வாய்ச் சொற்களும் எங்கும் பயன் பெறா.

## வினாக்கள்

1. 'கல்லானே' என்பதற்குச் சாதாரண மக்கள் கூறும் பொருள் யாது?
2. 'செல்லாது அவன் வாயிற் சொல்.' - எவன் வாயிற்சொல்? ஏன்?
3. 'கைப்பொருடன்னின் மெய்ப் பொருள் கல்வி.' - இதற்கும் இச்செய்யுளுக்கும் உள்ள வேற்றுமை என்ன?
4. மக்களிடத்தில் இயல்பாக மிக்க அன்புடையவர் யாவர்?
5. இதிலுள்ள பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் எடுத்துக் காட்டு.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 15

## பொழிப்பு

ஆற்றின் வெள்ளப் பெருக்கு வற்றி வெயிலினால் அம்மணல் உலர்ந்து பாதத்தைச் சுடுகின்ற அப்போதும்

அந்த ஆறு தன் ஊற்று நீர்ப்பெருக்கால் உலகத்தை உண்பிக்கும். உயர் குடியில் பிறந்தவர் வறுமையை அடைந்தாலும், தம்மிடம் வந்து யாசித்தவர்க்கு மனமிசைந்து இல்லையெனக் கூறமாட்டார்.

குறிப்பு :—நல்கூர்ந்தார் - வறுமை உற்றோர், இசைந்து - மனமிசைந்து.

## வினாக்கள்

1. நற்குடிப் பிறந்தாரின் குணமென்ன ?
2. 'ஆறு அடி சுடும்' என்பதனால் நீ என்ன தெரிந்துகொள்ளுகிறாய் ?
3. 'நல்கூர்ந்தாராணலும்' - இதற்கு உபமானம் எது ?
4. சில சமயங்களில் சிறிதும் தண்ணீர் இல்லாமல் வற்றிப்போகும் ஆறு ஏதாவதொன்றைக் குறிப்பிடு.
5. ஒருவர் தம்மிடத்தில் இருப்பதை ஒளித்தல் கூடாது என்பதற்கு ஆத்தி சூடியிலிருந்து ஓர் உதாரணம் காட்டு.
6. 'இல்லையென மாட்டார்'—எப்படி ?
7. குடிப்பிறந்தார் - இதற்கு அடைமொழி என்ன ?

## 3. விவேக சிந்தாமணி

(பல புலவர்கள்)

மெய்யதைச் சொல்வா ராகில்
விளங்கிடு மேலு நன்மை
வையக மதனைக் கொள்வார்
மனிதரிற் றேவ ராவார்
பொய்யதைச் சொல்வா ராகில்
போசன மற்ப மாகும்
நொய்யவ ரிவர்க ளென்று
நோக்கிடா ரறிவு ளோரே. 1

### பொழிப்பு

ஒருவர் உண்மையையே பேசுவாராகில் மேன்மேலும் அவருக்கு நன்மை பெருகும். உலகம் யாவும் அவர் வசப்படும். மனிதருக்குள்ளே அவர் தேவரெனக் கொண்டாடப்படுவர். பொய் பேசுவாராயின், அவருக்கு உணவு கிடைப்பதும் அருமை. பெருந்தன்மை அற்றவர் என அறிவுடையோர் அவரைக் காணவும் விரும்பமாட்டார்.

குறிப்பு:—வையகம் - உலகம், போசனம் - உணவு.

### வினாக்கள்

1. மெய் என்னென்ன நன்மைகளைத் தரும்?
2. மெய் சொல்லி மேன்மை அடைந்தவர் யாரேனும் ஒருவரைக் குறிப்பிடு.
3. போசனமற்பமாகும்—யாருக்கு?
4. தேவர் என்று யாரைச் சொல்லுகிறோம்?

5. நொய்யவர் என்பதன் பொருள் என்ன?
6. அறிவுள்ளோர் பொய்யரிடத்தில் எப்படி நடந்துகொள்கின்றனர்?

தந்தையுரை தட்டினவன்
தாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம்
ஆணை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி
தாண்டினவன் நால்வர்
செந்தழலின் வாயினிடைச்
சேர்வதுமெய் கண்டீர். 2

பொழிப்பு

தந்தையின் வார்த்தையைத் தள்ளி நடந்தவன், தாயின் சொற்களை இகழ்ந்துரைத்தவன், பெருமையுடைய குருவின் கட்டளையை மறந்தவன், நன்மையைத் தரும் வேத மார்க்கத்தைத் தவறி நடந்தவன் ஆகிய இந்நால்வரும் சிவந்த எரி வீசுகின்ற நரகத்தின் வாயிலை அடைவது உண்மையாகும்.

குறிப்பு :—தேசிகர் - குரு, ஆணை - கட்டளை.

வினாக்கள்

1. "ஆணை"—யார் ஆணை?
2. உரை, உறை - இவற்றிற்குப் பொருளென்ன?
3. தட்டினவன், இகழ்ந்தோன், மறந்தோன், தாண்டினவன் - இவற்றிற்குத் தனித்தனியே பொருள் கூறு.
4. தழலின் குணமும் நிறமும் எவை?
5. உலகில் யார் யார் நமக்கு நன்மை செய்கின்றவர்?
6. பெரியோர் கூறும் புத்திமதி நமக்கு எவற்றைத் தரும்?

ஆலிலை பூவுங் காயு மளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சி யெல்லாந் தங்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பர் கோடி கோடி
ஆலிலை யாதி போனா லங்குவந் திருப்பா ருண்டோ. 3

பொழிப்பு

ஆலமரத்தில் இலை, பூ, கனிந்த பழம் முதலியன நிறைந்திருப்பின், பட்சிகள் பல தங்கள் வீடு போன்றே அதில் கூடுகட்டி வாழும். உடல் வன்மையுடைய கோடிக் கணக்கான வாலிபரும் அம்மரத்தைத் தேடி வந்து இளைப் பாறிப் பலவாறு அதைப் போற்றிப் பேசுவர். அந்த ஆல மரமே இலை முதலியன உதிர்ந்து பட்டுப் போயின், அங்கு யாரேனும் வந்திருப்பரோ!

இதைப் போன்றே பொருளிருப்பின் ஓடி வருபவர் பலராவர். இன்றேல், உறவினரும் நோக்கிப் பாரார்.

வினாக்கள்

1. ஆலம் விதையின் அளவு என்ன ?
2. ஆல் வளர்ந்த பிறகு யார் யாருக்குப் பயனளிக்கின்றது ?
3. இப்பாட்டில் சுட்டுச்சொல் எது ?
4. ஆலிலை எதற்குப் பயன்படுகிறது ?
5. எப்போது யாரும் ஆலமரத்திடம் வந்திருப்பதில்லை ?
6. சுற்றத்தாரும் மற்றோரும் எப்போது நம்மை நாடி வருவர் ?
7. ஒருவருக்குக்கூட நிழல் தராத மரம் எது ?

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித் தீட்டின்
நற்றமிழை யெழுதவெழுத் தாணி யாமோ
பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப்
பெரியவிளக் கேற்றிவைத்தால் வீட தாமோ

தாய்வார்த்தை கேளாத சகசண் டிக்கென்
சாற்றிடினு முலுத்தகுணந் தவிர மாட்டான்
ஈவாரை ஈயவொட்டா னிவனு மீயான்
எழுபிறப்பா லுங்கடையா மிவன்பி றப்பே. 4

## பொழிப்பு

நாய் வாலை நீட்டித் தீட்டினாலும் நல்ல தமிழை எழுதும் எழுத்தாணி ஆகுமா? பேய் வசிக்கும் சுடுகாட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்தி ஒளியுள்ள விளக்கேற்றி வைப்பினும், மக்கள் வசிக்கும் அழகிய வீடாகுமா? தாய் மொழியைக் கேளாத துஷ்டனுக்கு என்ன நல்ல வார்த்தை சொல்லினும் அவன் உலோப குணத்தை விடமாட்டான்; ஏழைகளுக்குத் தருமஞ் செய்பவரைச் செய்ய ஒட்டான்; இவனும் வறியோர்க்குக் கொடான். இப்படிப்பட்டவன் பிறப்பு, ஏழு வகைப் பிறப்பினும் கடைப்பட்டதாகும்.

குறிப்பு:—நல் + தமிழ் = நற்றமிழ், சண்டி - துஷ்டன், உலுத்த குணம் - உலோப குணம்.

## வினாக்கள்

1. முற்காலத்தில் எதனால் எதில் எழுதினார்கள்?
2. நாய் வாலின் தன்மை என்ன?
3. பேய் எங்கு வாழும்? ஏன்?
4. தாய், 'சொற்றுறந்தொரு வாசகமில்லை.' இதன் கருத்தை மேற்செய்யுளின் பொருளோடு பொருத்திக் காட்டு.
5. ஈயாதவனை என்னவென்று வழங்குகிறோம்?
6. ஈவாரை - இதன் முதல் நிலை யாது?

## 4. தனிப் பாடல்கள்

(பல புலவர்கள்)

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது. 1

பொழிப்பு

அன்பில்லாதவள் எனக்குப் படைத்த அன்னத்தை நோக்குதற்குக் கண் கூசுகின்றது; எடுத்தற்குக் கை நாணித் துன்புறுகின்றது; உண்பதற்குப் பெருமை வாய்ந்த வாய் திறத்தல் செய்தலில்லை. வீணாக என் எலும்பெல்லாம் பற்றி எரிகிறது. ஐயையோ! இதற்கென் செய்வேன்!

குறிப்பு:—மாண் - மாட்சிமை, பெருமை. ஒக்க - சமானமாக.

### வினாக்கள்

1. அவ்வையார் வாய் எத்தகையது?
2. எரிகின்றது எது? ஏன்?
3. 'முப்பழத்தோடு பாலன்னம் முகங்கடுத்திடுவாராயின், கப்பிய பசியினோடே கடும்பசியாகுந் தானே'—இது யார் வாக்கு?
4. இதற்கும் மேற்செய்யுளுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
5. உணவிட்டவள் அன்பில்லாதவள் என்பதை அவ்வையார் எப்படி அறிந்தார்?
6. எரி, எறி - இவை இரண்டிற்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?

இட்டமுடனென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றோ
நெஞ்சமே யஞ்சாதே நீ. 2

பொழிப்பு

தாயே, இன்பதுன்பங்கள் இம்முறையில் நடைபெறுமென்று விருப்புடன் என் சிரசில் எழுதி வைத்த சிவனும் மாய்ந்துவிட்டானே! இல்லை மிகுந்த பஞ்சம் வரினும் அவனுக்கன்றோ என்னைக் காக்கும் பொறுப்பு உரியதாகும்! ஆதலின், நீ மனம் சோர்வடையாதே,

குறிப்பு:—பாரம் - பொறுப்பு.

வினாக்கள்

1. தலையில் எழுதுபவர் யார்?
2. பஞ்சமென்பது என்ன?
3. இச்செய்யுள் யாரால் யாரைப் பார்த்துச் சொல்லப் பட்டது?
4. அஞ்சாதே—இதன் முதல் நிலை என்ன?
5. சிவபிரானைத் தொழுகின்றவரை என்ன மதத்தினர் எனக் கூறுகின்றோம்?
6. வைணவர் என்பது யாருக்குப் பெயர்?
7. நெஞ்சின் தொழிலென்ன?

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும். 3

பொழிப்பு

நம்மை மதியாதாரின் வாசலை மதித்துச் சென்று ஒரு முறையும் மிதியாமலிருத்தல் கோடிப்பொன் பெற்றதற்கு ஒப்பாகும். 'இதைப் புசியுங்கள்; புசியுங்கள்,' என அன்புடன் உபசரியாதவரின் வீட்டில் உணவு கொள்ளாமலிருத்தல் கோடிப்பொன் பெற்றதற்கு ஒப்பாகும். மிக்க பொருள் தந்தேனும் நற்குடியில் தோன்றியவருடன் நாமே சென்று சேருதல் கோடிப்பொன் பெற்றதை நிகர்க்கும். பலகோடிக் கணக்கான பொருளைப் பிறரிடமிருந்து பெறினும், ஒருவன் தன் நாவினால் சொல்லிய சொல்லைத் தவறாதிருத்தல் கோடிப் பொன் பெற்றதற்குச் சமமாகும்.

குறிப்பு:—கோடி பெறும் - கோடிப் பொன் பெறும், கோடாமை - தவறாமலிருத்தல்.

வினாக்கள்

1. முதலடிக்குக் கொன்றை வேந்தனிலிருந்து ஓர் உதாரணம் காட்டு.
2. நற்குடிப் பிறந்தார் சேர்க்கையினால் நமக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?
3. நாக் கோடுதலினால் ஏற்படும் தீமைகள் எவை?
4. எந்த உணவை உண்ண வேண்டும்?
5. கோடியுறும் - என்ன கோடி?
6. 'சென்று' - இதன் முதல் நிலை எது?

மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு, 4

பொழிப்பு

இவ்வுலகில் அரசனாய் விளங்குபவனும் நீ ஒருவன் தானே! செழிப்புற்ற நாடெல்லாம் உன்னுடையதுதானே! உன்னையறிந்துதான் யான் தமிழைக் கற்றேனே! எங்ஙனம் உலகில் குரங்கை ஏற்று (தாங்கி)க் கொள்ளாத மரக் கிளைகள் இல்லையோ, அங்ஙனமே என்னைக் கண்டவுடன் விரைவாக ஏற்று உபசரியாத மன்னரும் இல்லை.

வினாக்கள்

1. குரங்கு உள்ள இடம் எது?
2. கம்பர் சோழனிடம் சொல்லியவை யாவை?
3. வேந்து என்பதற்கு வேறு பெயர் கூறு.
4. இச்செய்யுளின் சந்தர்ப்பம் யாது?
5. உன்னையறிந்தோ தமிழை யோதினேன் - இதனால் நீ அறிந்தது யாது?

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. 5

பொழிப்பு

மலை நாடு மிகுதியும் யானைகளைப் பெற்றிருக்கும்; சிறந்த வளப்பம் பொருந்திய சோழ நாடு மிக்க உணவை (சோற்றை) உடைத்தாயிருக்கும்; பாண்டியன் அரசு செலுத்தும் தெற்குத் திசையிலுள்ள பாண்டி நாடு விலை உயர்ந்த முத்துக்களைப் பெற்று விளங்கும். தெளிந்த நீர் நிறைந்த வயல்களினால் சூழப்பெற்று நன்மை வாய்ந்த தொண்டை நாடு கல்வியறிவிற் சிறந்த மூத்தோரைப் பெற்றுப் பெருமை அடைந்து துலங்கும்.

குறிப்பு:—பூழியர் கோன் - பாண்டியருக்கு அரசன், தெள் + நீர் = தெண்ணீர், வயல் + தொண்டை = வயற்றொண்டை, நல் + நாடு = நன்னாடு.

விஞக்கள்

1. நீ இருப்பது எந்த நாடு?
2. 'சோழ வளநாடு சோறுடைத்து'—ஏன்?
3. வேழத்திற்கு வேறு இரண்டு பெயர்கள் கூறு.
4. இவற்றுள் எந்த நாடு சிறந்தது?
5. நான்கு நாடுகளிலும் ஒவ்வோர் ஊரைக் குறிப்பிடு.
6. இந்நாடுகளின் எல்லைகளைத் தெரிவி.
7. 'நன்னாடு' - இதைப் பிரித்துக் காட்டு.

ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ — நீல நிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ. 6

பொழிப்பு

ஆலமரத்தை இனிய கனியைத் தரும் பலா மரமாகச் செய்ய முடியுமோ? நன்றியறிதலாகிய அருமைக் குணமுள்ள நாயின் வாலை நேராகச் செய்ய வசப்படுமோ? கருநிறமுடைய காக்கையைப் பேசுமாறு செய்ய நம்மாற் கூடுமோ? நெஞ்சில் சிறிதும் இரக்கமற்ற மூர்க்க குணம் வாய்ந்தவனைச் சீர்மைப்படுத்த யாராலேனும் ஆகுமோ?

குறிப்பு:—சுணங்கன்-நாய், கருணை-இரக்கம்.

விஞக்கள்

1. ஆல், பலா - இவற்றால் உண்டாகும் பயன்கள் எவை?
2. நாயின் வால் எப்படி இருக்கும்?

3. எந்தப் பறவை அழகாகப் பாடும்?
4. இச்செய்யுளில் கூறப்பட்ட செய்ய முடியாத காரியங்கள் எத்தனை? அவற்றுள் பிறருக்குத் தீங்கு விளைப்பது எது?
5. நாயின் சிறந்த குணம் யாது?
6. இச்செய்யுளிலுள்ள வினைச்சொற்களைக் குறிப்பிடு.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். 7

பொழிப்பு

கற்ற புலவர்களே, கற்ற கல்வி கைம்மண்ணளவும், கற்க வேண்டுவது உலகளவும் ஆகுமென்று தெள்ளிய ஞானம் வாய்ந்த கலை மகள் இயம்புகின்றனள். ஆதலின், எல்லாம் படித்துவிட்டோம் என்று நீங்கள் வீணாக மிக்க பந்தயத்தைக் கூற வேண்டா. எறும்பிற்கும் அதன் கையால் அதன் உடல் எட்டுச் சாணே இருக்கும்.

குறிப்பு:—கலை மகள்-சாஸ்திரங்களுக்குத் தலைவியாகிய சரஸ்வதி, புலவீர்-அறிவுடையவரே, புலமை-பகுதி.

வினாக்கள்

1. கலை மடந்தை யார்?
2. எறும்புகளில் நான்கு வகையைக் குறிப்பிடு.
3. கலை மகள் இயம்புவது யாது?
4. கலை மகளுக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறு.
5. யாருக்குப் புலவர் என்பது பெயர்? யாரேனும் இரண்டு புலவரைச் சொல்லு.
6. 'ஓதுகிறாள்'—பகுதி என்ன?

# III கதைத் தொகுதி

## 1. அல்லி அரசாணி மாலை

முன்னொரு காலத்தில் சோழ நாட்டில் பல வருடங்கள் மழையில்லாமல் நாடு வறுமை அடைந்தது. மக்கள் உணவின்றி மிக வருந்தினார்கள். ஆதலின், சோழ அரசன், பாண்டியனிடம் சென்று, தன் துன்பத்தை முறையிட்டான். பாண்டியன் மனம் மிகவும் இரங்கிற்று. அவன் சோழனை அழைத்துக்கொண்டு மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரக் கடவுளிடம் சென்று சோழன் குறையை வெளியிட்டனன். மழையைக் கொடுத்தற்கு இந்திரனே தலைவன் என்பது சோமசுந்தரக் கடவுளால் அறிவிக்கப்பட்டது. இருவரும் இந்திர உலகஞ் சென்றனர். இந்திரனைக் கண்டவுடன் சோழன் பணிவுடன் வழிபட்டான். பாண்டியனோ, இந்திரனை வணங்கவில்லை. இஃது இந்திரனுக்குக் கோபத்தை மூட்டியது. பாண்டியன் கர்வத்தை அடக்க வேண்டுமென்று இந்திரன் தீர்மானித்தான். அவர்கள் எண்ணத்தை அறிந்த இந்திரன் மழையினால் சோழநாட்டை வளமுறச் செய்வதாக வாக்களித்தான். பாண்டியனும் சோழனும் அவரவர் நாடு திரும்பினர். சோழநாடு மழையினால் வளம் பெற்றுச் செழித்தது. மழையில்லாமல் பாண்டி நாடு துன்புற்று வருந்தியது. கொடி செடிகளின்றி நாடு உலர்ந்தது. இஃது இந்திரன் செய்கையாகும்.

பாண்டி நாடெங்கும் அனல் காற்று வீசியது. அதைத் தணித்துக்கொள்ள ஒரு நாள் சோமசுந்தரக் கடவுளும் அங்கயற் கண்ணம்மையும் ரிஷபத்திலேறி வெளிச் சென்றனர். மரஞ்செடி ஒன்றுமின்றிக் கனல் வீசும் கானகத்

தில் வில்வ மரமொன்று கொழுந்துடன் தழைத்து ஓங்கி வளர்ந்திருந்தது. அதைக் கண்டதும் மகிழ்வெய்திய சிவபிரானும் உமாதேவியும் அம்மரத்தடியில் தங்கி இளைப்பாறினர். அப்போது நீர்க்காக்கை ஒன்று சிறகில் கொண்டு வந்த தண்ணீரை அம்மரத்தின்மேல் தெளித்தது. அதைக் கண்ட சிவபிரான் அதன் காரணத்தைத் தெரிவிக்கும்படி நீர்க்காக்கைக்குக் கட்டளையிட்டார். வில்வம் பசுபதிக்கு விருப்பமாதலின், தான் அதை வளர்ப்பதாக அது விடை அளித்தது.

அதற்கு மிகவும் மகிழ்ந்த நீல கண்டர், அந்நீர்க்காக்கைக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அது, தான் பாண்டியனை மணந்துகொள்ளவும், தன் மகன் அரசனாகவும் வரம் கொடுக்க வேண்டுமெனச் சிவபிரானை வேண்டிற்று. அவ்வாறே வரமீந்து, நீர்க்காக்கையைப் பெண்ணாகச் செய்து, கயிலாயபதி மறைந்தனர்.

பெண் வடிவம் பெற்ற நீர்க்காக்கை பாண்டியனிடம் சென்று, அந்தப்புரத்தில் தோழியாய் அமைந்தது. பாண்டியனுக்கும் அத்தோழிக்கும் நட்பு உண்டானது. பின்னர் அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு நீன்முகன் எனப் பெயர் வைத்து யாவரும் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். அவன் ஆயுத வித்தை முதலியவற்றில் தேர்ந்து விளங்கினன்.

பாண்டியர்களுக்கு மக்களில்லாமையால் பாண்டிநாட்டிற்கு நீன்முகனை அரசனாக்கி அவர்கள் காடுசென்று சிவபிரானை நோக்கித் தவஞ்செய்தார்கள். உமாதேவியின் அருளினால் அல்லியிலைமேல் ஒரு பெண்மகவு தவழ்ந்தது. பாண்டியர் அதை எடுத்துக்கொண்டு தம் நாட்டுக்குச் சென்றனர். அல்லியிலையில் தவழ்ந்த அக்குழவிக்கு அல்லி என்னும் பெயரிடப்பட்டது. பாண்டியர்கள் இவ்விஷயத்தை நீன்முகனுக்குத் தெரிவித்துத் தங்கள் நாட்டைத் தரும்படி

கேட்டார்கள். ஆனால் அவன் நாட்டைக் கொடுக்க மறுத்து விட்டதுமன்றிப் பாண்டியரைக் கப்பங் கட்டும்படியும் வற்புறுத்தினான். அவனை வெறுப்பது தகுதியுடையதன்று என்பதைக் கருதிய பாண்டியர், அவனுக்குக் கப்பஞ் செலுத்திக்கொண்டே மதுரையில் வாழ்ந்து வந்தனர்.

அல்லியம்மையார் இளமையிலேயே சுறுசுறுப்பும் கல்வியில் ஊக்கமும் பெற்றிருந்தனர். கல்வி மாத்திரமே அன்றி, ஓர் ஆண்மகன் கற்கவேண்டிய யுத்த முறைகளையும், ஆயுதப் பயிற்சியையும் மிக விரைவில் அவர் கற்றுத் தேர்ந்தனர். நுண்ணிய அறிவு அவரிடம் குடிகொண்டது. வீரம் அவருடன் உருக்கொண்டு வளர்ந்தது. கண்டோர் யாவரும் வியக்குமாறு அப்பெண் மணியார் பெருமை பெற்று விளங்கினர்.

ஒருநாள் அல்லியார் பாண்டியர்கள் நீன்முகனுக்கு அனுப்பும் கப்பங்களைப் பார்த்து அதன் காரணத்தை அறிந்தனர். அஃது அவரைப் பெரிதும் வருத்தியது. தம் தந்தையர் வேறொருவனுக்குக் கப்பஞ் செலுத்துவது அவருக்குப் பெரிதும் நாணத்தை விளைத்தது. அவர் மனம் துடித்தது. இரத்தம் கொதித்தது. ஆதலால், சிறுமியராகிய அல்லியார் நீன்முகன்மீது படையெடுத்துப் போருக்குப் புறப்பட்டார்.

### அல்லியார் நீன்முகனைச் சங்கரித்தது

தேரைச்சுற்றித் தெண்டனிட்டுத் தேரின்மீ தேறினளே.
அம்புவில்லுங் கைப்பிடித்து ஆயுதமுந் தோளில்வைத்து,
தேவதுந்து மிமுழங்கத் தேன்மொழியாள் வருகிறாளே.
வந்து வளைத்தாளே வல்லிடியோ லல்லியளும்,
வில்வளைத்துநாணிபூட்டி வில்குணத்தொனிகள்செய்தாள்.
விட்டாள் சரபாணம் மேனியெல்லாந் தான்மறைய.

யானைசேனை பரிவாரம் அடங்கலுங் கொல்லலுற்றாள்.
தென்னங்காய் போலாகச் சேனைதலை யுருளவிட்டாள்.
அறுத்த தலைகளெல்லாம் அம்மானை ராடினவே.
ஆலைவாய்க் கரும்பதுபோல் அரைத்து ரசம்பிழிந்தாள்.
நீன்முகன் சேனையெல்லாம் நிர்த்தூளி பண்ணலுற்றாள்.
அரைநாழிக் குள்ளே அதம்பண்ணாள் பாளையத்தை.
சண்டைபண்ண மாட்டாமல் தளர்ந்தோடிப் போனார்கள்.
பண்டார மென்பாரும், பரதேசி யென்பாரும்,
பூணூலைக் காண்பித்துப் பிராமண ரென்பாரும்,
சமர்க்குவர வில்லையென்று சலாம்செய்து செல்வாரும்,
வடுகரெல்லாம் நீளென்பார், வன்றமிழர் தண்ணீரென்பார்,
துருக்கரெல்லாம் பாணியென்று சொல்லிப் புலம்புகிறார்.
இவ்விதமாய்ப் பாளையத்தை இறக்கடித்தா ளல்லியம்மாள்.
நீன்முக ராசனண்டை நேரிழையும் வந்தெதிர்த்தாள்.
'ஆரடா நீன்முகனே; அறிவுகெட்ட பாதகனே,
கொசுவும் பருந்தாமோ? கூடப் பறக்குமோடா?
உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ?
கொல்லவென்றே பூவுலகில் அல்லியிலே பெண்பிறந்தேன்.
உன்குல தெய்வமே ஓங்கார அல்லியம்மாள்.
எமனுரு யரவந்து இங்கேவா என்றாரோ?
ஆகையி னாலேயடா அமருக்கு வந்துவிட்டாய்.
என்சமர்த்துஞ் சேவகமு மிப்போத றிவாய்பார்.'
கேட்டந்த நீன்முகனுங் கெர்வ மதிகமுமாய்
மீசை துடிக்கிறதும் முன்கோப மாகிறதும்,
'சாணுண்டு பெண்ணேநீ சமர்த்தாகப் பேசுகிறாய்!
வல்லமையைப் பார்' என்று வளைத்தானே வில்லதனை.
இவ்விருவர் தேரு மிருநிலத்திற் றுஞ்சுழல

மாணிக்கச் சொக்கரையு மனத்தில் நினைத்தாளே.
அங்கயற்கண் ணாயகியை ஆதிபர மேஸ்வரியை
மனத்தில் நினைத்தல்லோ வாங்கிவிட்டாள் பாணமதை.
பாவியந்த நீன்முகனும் பதறிச்ச ரம்பொழிந்தான்.
கோடானு கோடிபாணம் குறித்தானே நீன்முகனும்.
அல்லிப் பெருமாளும் அதிகமான கோபமுடன்
ஒன்றுக்குப் பத்துக்கணை ஒருநூற்றுக் காயிரமாம்
சரமேற் சரம்பொழிந்தாள் வருணன்றன் அஸ்திரங்கள்
நாலுநாள் மட்டும் நல்லசண்டை பண்ணலுற்றார்.
அப்போது அல்லியம்மாள் அம்மனையே தோத்திரித்து
இடியாஸ்தி ரமதனை எடுத்துமந்த்ர நூபயிட்டு
மார்பளவு வாங்கியேதான் தோள்பிளக்க வேதொடுத்தாள்.
சல்லடைக் கண்போலே சரீரங்கள் தொளையாகி,
பதாதியாய் நின்றானே பராக்கிரம நீன்முகனும்
எடுத்தான் வளைதடியை ஏற்றினான் கேடயத்தை.
கண்டாளே அல்லியம்மாள் கண்சிவந்து கோபமுடன்
கேடயமும் வாளெடுத்துக் கொர்ச்சித்துக் கீழ்க்குதித்தாள்.
பசுகண்ட புலியதுபோற் பாய்ந்தானே நீன்முகனும்.
'உன்னை விடுவேனென்றே உன்மனத்தி லெண்ணாதே.
நீன்முகா உன்றலையை நிமிஷத்தில் வாங்குவேன்பார்.'
இடசாரி வலசாரி இருவருஞ் சுழலுகிறார்;
சக்கரஞ் சுழல்வதுபோற் சமர்த்தாகச் சுழலுகிறார்;
நான்குநா ழிகைமட்டும் நல்லசண்டை பண்ணினார்கள்.
பொற்றாம ரைதனிலே பிறந்திட்ட அல்லியளும்
ஆலவாய்ச் சொக்கரென்னும் ஆண்டவரைத் தானினைத்து
பக்கவள வாகவந்து பாய்ச்சலுட னேயெழும்பி
வீசினாள் வாளாலே வேறிரண்டு துண்டாகக்

கருப்பங் கணையைப்போற் கண்டித்துக் கீழ்வீழ்த்தி
ஏறினள் தேர்மே லெடுத்தாள் நெடுங்குடையை.
நீள்முகன் வீழ்ந்தானென் றுநீள்சங்குதான்தொனித்தாள்.
தேரைத் திருப்பிவந்தாள் தேன்மொழியா ளல்லியம்மாள்.
செயங்கள் செயங்களென்று செம்பேரி போட்டுவந்தாள்.

## அல்லியம்மாள் மதுரைக்கு வந்து பட்டங் கட்டிக்கொண்டது

தேவதுந்து பிமுழங்கத் தேவர்பூ மாரிபெய்ய
ஆறாயி ரவரென்னு மையன்மார் தாமறிந்தார்.
சந்தோஷப் பட்டங்குத் தார்வேந்த ரோடிவந்தார்.
மகள்தன்னைப் பார்த்தலவோ மகிழ்ந்தார்கள் பாண்டியர்கள்.
அரைநாழிக் குள்ளே அலங்கரித்தார் பட்டணத்தை.
எங்கு மலங்கரித்து எத்திசையும் நீர்தெளித்து
மதுரைத் தெருவைச்சுற்றி மாளிகையில் வந்தமர்ந்தாள்.
சிங்காத னத்தின்மீ தேறினள் தேன்மொழியாள்.
ஆறாயிரம் பாண்டியரா மையன்மா ரானவர்கள்
பட்டந் தரித்தார்கள் பத்தினியா ளல்லியட்கு;
சீமைத் துரைத்தனமுஞ் செங்கோலுந் தந்தார்கள்.
அல்லிக் கொடிகட்டி யரசுநிலை யாளுகிறாள்.
ஆண்பட்டங் கட்டியே அல்லியர சாளுகிறாள்.
பெண்பட்டங் கட்டியே பூமியர சாளுகிறாள்.
இந்த விதமாக எல்லையர சாண்டிருந்தாள்.

## 2. விடு கதைகள்

செக்கச் சிவந்திருப்பாள்;
செவ்வாழை போலிருப்பாள்;
வாலும் முளைத்திருப்பாள்;
வந்திருப்பாள் சந்தையிலே. 1.

நெருப்பிலே பிறந்து,
நீரிலே மூழ்கி,
வாயிலே புகுந்து,
வானத்திலே போவதெது? 2.

அரிசிபோல் பூப்பூக்கும்;
அம்மாடினைக் காய்காய்க்கும். 3.

பச்சைக் கதவு வெள்ளை ஜன்னல்
கறுப்பு ராஜா உள்ளே உண்டு. 4.

கறுப்புச் சட்டைக்காரன்
காவலில் கெட்டிக் காரன். 5.

பத்துவிரல் பந்தாட,
ஐந்துவிரல் அமர்ந்திருக்க,
சூரியனுடன் சூதாட,
எமனுடனே வாதாட. 6.

நாலுலக்கைக் குத்திவர
இரண்டுமுறம் புடைத்துவர
அரசன் மகன் ஏறிவர. 7.

ஒருவன் சுழன்றுண்பான்;
ஒருவன் இருந்துண்பான். 8

ஐவருடன் தான்பிறந்தான்
தரும னல்ல;
அதிலொருவன் சாடிசொல்வான்
மனித னல்ல;
தன்சுமையைத் தான்சுமப்பான்
ஞானி யல்ல;
ஊரெங்கும் புல்சுமப்பான்
பறைய னல்ல;
கன்னிகையை மணம்புரிவான்
கடைசி தம்பி. 9.

ஏணி மேலே கோணி;
கோணி மேலே குழாய்;
குழாய் மேலே குண்டு;
குண்டு மேலே புல்லு;
புல்லுக் குள்ளே பூச்சி. 10.

பட்டை பட்டை நீக்கி
பதினாறு பட்டை நீக்கி
முத்துப் பட்டை நீக்கி
முன்னே வந்தாள் அழகியாள். 11.

விடுகதைகளின் விடை:—(1) உலர்ந்த மிளகாய். (2) குடாக்கு. (3) பச்சை மிளகாய். (4) சீதாப் பழம். (5) பூட்டு. (6) வரட்டி. (7) யானை. (8) எந்திரம். (9) கைவிரல் ஐந்து. (10) மனிதன். (11) வாழைப் பூ.

# எழுத்து வேறுபாடும் பொருள் வேறுபாடும்

## ரகர றகர பேதங்கள்

1. அறம் - தருமம்
2. அரம் - ஓர் ஆயுதம்
3. அரி - திருமால், சிங்கம், அழி
4. அறி - தெரிந்து கொள்
5. அரிந்து-நறுக்கி, துணித்து
6. அறிந்து - தெரிந்து
7 இரந்து - யாசித்து
8. இறந்து - மரணமடைந்து
9. இரு - இரண்டு, பெரிய
10. இறு - ஒடி, முரி
11. உரைத்தல் - சொல்லல், தேய்த்தல்
12. உறைத்தல் - எரிதல், தாக்கல்
13. எரி - தீ
14. எறி - வீசு
15. கரத்தல் - மறைத்கல்
16. கறத்தல் - பால் கறத்தல்
17. குரங்கு - வானரம்
18. குறங்கு - தொடை
19. கூறல் - சொல்லல்
20. கூரல் - மிகுதல்
21. மரம் - விருட்சம்
22. மறம் - பாபம், வீரம்

## லகர, ளகர ழகர பேதங்கள்

1. அழி - கெடு
2. அளி - கொடு
3. அலி - ஆணும் பெண்ணு மல்லாதது
4. ஒழி - நீக்கு, விடு
5. ஒளி - பிரகாசம், புகழ்
6. கலை - நூல், சாத்திரம்
7. களை - குற்றம், புல்
8. கல்-காவிக்கல்,இரத்தினம்
9. கள் - மது, மலர்த்தேன்
10. கொல் - அழி
11. கொள் - வாங்கு, ஒரு தானியம்
12. தாழை - தாழஞ் செடி
13. தாளை - பாதத்தை

14. நல்லார் - உத்தமர்
15. நள்ளார் - பகைவர்
16. நீலம் - ஒரு நிறம்
17. நீளம் - நெடுமை
18. புலி - ஒரு மிருகம்
19. புளி - புளிப்பு, புளியமரம்
20. புல் - புல்லு, அற்பம்
21. புள் - பறவை
22. வலம்-வலப்பக்கம், வெற்றி
23. வளம் - அழகு, செல்வம்
24 வலி - நோய், வலிமை
25. வளி - காற்று
26. வழி - மார்க்கம், நெறி
27. வாழ் - வசி
28. வாள் - ஓர் ஆயுதம்
29. வால் - தோகை,வெண்மை

## ணகர னகர பேதங்கள்

1. ஆணை - கட்டளை
2. ஆனை - யானை
3. எண் - இலக்கம், மதிப்பு
4. என் - என்ன, எனது
5. தன் - சாரியை, தன்னுடைய
6. தண் - குளிர்ச்சி
7. மணை - உட்காரும் பலகை
8 மனை - வீடு, மனைவி.
9. மணம் - கலியாணம், வாசனை
10. மனம் - உள்ளம்
11. மண் - புழுதி, சுட்டசாந்து
12. மன் - நிலைபெறு, அரசன்

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அடக்க | 22 |
| அடுத்து | 17 |
| அட்டாலும் | 16 |
| அரிசி | 59 |
| ஆண்டாண்டு | 31 |
| ஆய கலைகள் | 11 |
| ஆலிலை | 45 |
| ஆலைப் | 51 |
| ஆற்றுப் | 41 |
| ஆன முதலி | 39 |
| இட்டமுட | 48 |
| இல்லா | 24 |
| உடன் பிறந் | 23 |
| ஏணிமேலே | 60 |
| ஐவருடன் | 60 |
| ஒருநா ளுணவை | 31 |
| ஒருவன் | 60 |
| கண்ணுண் | 12 |
| கலையின் | 12 |
| கல்விக் | 12 |
| கல்லாத | 26 |
| கல்லானே | 40 |
| கவையாகி | 20 |
| கறுப்பு | 59 |
| கற்றறு | 52 |
| கற்றூர் | 12 |
| காணக்கண் | 47 |
| கான மயி | 21 |
| சாதி யிரண் | 29 |
| சீரியர் | 23 |
| செக்க | 59 |
| செய்தீ வினை | 33 |
| சேவித்தும் | 34 |
| தண்ணீர் | 32 |
| தந்தையுரை | 44 |
| தாயினிற் | 11 |
| நல்லா | 15 |
| நல்லாரை | 18 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| நன்றி - - | 14 | மடல் - - - | 28 |
| நாய்வாலை - - | 45 | மதியாதார் - | 48 |
| நாலுலக்கை - | 59 | மாம்பழ - - | 40 |
| நீரு விழுது - - | 35 | மன்னவனு - | 49 |
| நீறில்லா - - | 38 | மன்னனு - - | 25 |
| நெருப்பிலே - - | 59 | மெய்யதை - | 43 |
| நெல்லுக் - - | 19 | வருந்தி - - | 30 |
| பச்சை - - | 59 | வேங்கை - - | 27 |
| பட்டை - - | 60 | வேதத் - - | 12 |
| பத்துவிரல் - - | 59 | வேதாளஞ் - | 37 |
| பாடுபட்டு - - | 36 | வேழ முடைத்து - | 50 |


THE LIBERTY PRESS, G. T MADRAS